தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 கடகம்/மடங்கல் (15/31-௮-90) ஓர் உருபா (இதழ் எண்: 140)

மண்டல் குழு அறிக்கை செயற்படுத்தம் - ஒரு பொது மதிப்பீடு!

சாதி, கல்வி, பொருளியல் - மூன்று நிலைகளையும் கணித்தறியும் முறையே பயனுடையதாக இருக்கும்!

எவ்வாறாயினும் சாதிப் பிரிவுகளை நிலைப் படுத்தி விடக் கூடாது!

வி. பி. சிங். தலைமையேற்றிருக்கும் தேசிய முன்னணி அரசு, தன் தேர்தல் அறிக்கையில் கூறிய உறுதிமொழிக்கு இணங்க, மண்டல் அறிக்கையை ஆகத்து 7-ஆம் பக்கல் முதல் செயல்படுத்த உறுதி பூண்டுள்ளது.

இந்த மண்டல் குழுவின் அறிக்கை செயலுக்கு வந்தால், இந்தியாவில் சாதி அடிப்படையில் பிற்படுத்தப் பட்ட மக்களாகக் கருதப் பெறுபவர்களுக்கு, நடுவண் அரசுப் பணிகளாகிய அஞ்சல்துறை, தொடர்வண்டித் துறை, வருமான வரித் துறை, வைப்பகத்துறை, வானொலி, தொலைக் காட்சித் துறை, பொருளியல் துறை, அறநெறித் துறை, செய்தித் துறை, படைத்துறை, ஆட்சித் துறை, வானூர்தித் துறை முதலிய கொழுத்த வருவாய் உள்ள அனைத்துத் துறைகளிலும், பார்ப்பனர்களுக்கும், மேலாளுமை வணிக வகுப்பினர்க்கும் உள்ள வாய்ப்புகளும் வசதிகளும் மளமளவென்று சரிந்து போகும். மாறாக, இதுவரை இத் துறைகளால் வரும் வாழ்க்கை நலன்களையே கண்டறியாத, ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களிடம் இவற்றில் ஓரளவு இடம் பெறும் வாய்ப்புகள் ஏற்படும். இதுவரை அவர்கள் இத் துறைகளைத் தகுதிகள், பண ஆளுமைகள் ஆகியவற்றால் எளிதாகக் கைப்பற்றி, நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விழுக்காட்டிற்கு மேல்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான-விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

1. அமர்த்தங்கள் 11-7-90

1. **தாராபுரம் நகர அமைப்பாளர்:**
கி. சீரங்கராயன், 43-ஏ நாராயணன் சந்து, தாராபுரம். 638 656.

2. **தாராபுரம். நகரச் செயலர்:**
செ. சண்முகம், ஆசிரியர், மீமர் முதன்மை வீதி, தாராபுரம்.

3. **தாராபுரம் நகரத் துணைச் செயலர்:**
சு. முத்து, ஆசிரியர், பாப்பையம்புதூர், தளவாய்ப்பட்டினம் (அஞ்) தாராபுரம் வட்.

4. **தாராபுரம் நகரப் பொருளர்:**
சோ. க. குமாரசாமி, தமிழாசிரியர், சோமன் கோட்டை. மூலனூர், தாராபுரம் வட்.

3. துணைப் பொதுச் செயலர் வேண்டுகோள்:

1) பொறுப்பாளர்கள் நன்கொடைப் பற்றுமுறி அச்சிட்டு, நன்கொடை திரட்டிச் செயல் படுக.

2) திரட்டும் தொகையில் மூன்றில் ஒரு பகுதி-யைத் தலைமையகத்திற்கு விடுத்திடுக. (முகவரி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், முதல்வர் உ.த.மு.க, மே/பா. தென்மொழி சென்னை-5.)

3) வரவு-செலவுகளை அறிவிப்புச் செய்க.

4) தமிழின விழாக்கள் — கருத்தரங்கங்கள் — மூலம் உ.த.மு.க. கொள்கைகளைப் பரப்புக.

5) நிகழ்ச்சிகளை எளிமையாகவும் அவ்வப் பகுதிகளில் உள்ளவர்களைக் கொண்டும் நடத்துக.

6) தீர்மானம், கருத்துரை, திறனாய்வு மூலம் கருத்துப் பரப்புதலை விரைவு செய்க.

3. துணைப் பொதுச் செயலர்க்கு வந்த மடல்கள்:

1. தாங்கள் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலராக அமர்த்தம் பெற்றிருப்பதறிந்து மகிழ்ந்தேன். தங்களது எழுத்-தைத் **தென்மொழி, தமிழ்நிலம்** ஏடுகள் வாயி-லாகத் தொடர்ந்து படித்து வருகிறேன். நண்பர்-களிடம் பாராட்டியுமிருக்கிறேன்.

தங்கள் பணியால் உ.த.மு.க. புதிய வலிவும் பொலிவும் பெறும் என்று நம்புகிறேன். வெற்றி பல ஈட்ட வாழ்த்துகிறேன்.

தி. பி. 2021 -கா-கஉ அன்புடன்,
சென்னை. (ஒப்) அரு. **கோபாலன்**

2. அன்பு கெழுமிய உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் அவர்களுக்கு, வணக்கம்.

27-5-90 நாளிட்ட தங்களின் மடல் கிடைக்கப் பெற்றேன். படித்து மகிழ்ந்தேன்.

ஐயா, நந்தமிழினம், இந்த நூற்றுண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த நூற்றுண்டிலாவது அடிமை நிலையிலிருந்து விடுபட்டு, முன்னிழந்த அனைத்துரிமைகளையும் மீட்டெடுத்து, முந்தைப் புகழோடு புதுப் புகழும் சேர்த்து,

"நாட்டு சீர்த் தமிழன் இந்த
நானில மாயங் கண்டு
காட்டிய வழியிற் சென்று
கதி பெற வேண்டும் என்றே
ஆட்டும் சுட்டு விரல் கண்டே
ஆடிற்று வையம் என்று
கேட்டு நான் இன்ப ஊற்றுக்
கேணியில் குளிப்ப தெந்நாள்?"

என்று நம் புரட்சிப் பாவேந்தர் கூறியுள்ள நிலைக்குத் தமிழினம் உயர வேண்டும் என்பது என் தணியாத ஆவலாகும். இந் நிலைக்கு நம்மின இளைஞர்களைப் பக்குவப் படுத்த வேண்டியது நம்-முடைய இன்றைய தலையாய கடமையாகும்.

இன்று இளைஞர்களின் எழுச்சி நிலை நாடெங்-கும் பரவலாய்க் காணப் படுகிறது. ஆனால் தனித்-தனி அமைப்புகளாய் இயங்கிக் கொண்டிருக்கின்-றன. இவற்றை ஒன்றிணைத்து ஒரு வலிமை மிக்க பேரியக்கமாய் மாற்றிச் சரியான பாதையில் செல்லச் செய்தல் வேண்டும். இதை நாம் செய்து விட்டோமானால், பாவேந்தர் கூறியுள்ள நிலையைக் கட்டாயம் நம்மினம் எதிர்காலத்தில் அடைந்தே தீரும்.

எனவே, நம் இயக்கம் இனிச் செயலில் இறங்கியாக வேண்டும். நமது இயக்கத்தின்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகலக்கால் பரப்பிக் கொண்டு, வேறு வகுப்பினரைக் கிட்டவும் நெருங்க விடாமல் அடக்கி ஆண்டு, நுகர்ச்சி பெற்று வந்தனர். இவற்றில் அரசு கை வைக்கப் போகிறது என்ற நிலை வந்ததும், அவர்கள் இவ்வரிய மாற்றங்களை ஏற்படுத்திய இம் மண்டல் குழுத் தீர்வுக்கு எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். இ்து ஒரு கொடுமையான அதிகார ஆளுமைப் போக்காகும்.

மண்டல் குழு அறிக்கை என்பது, **பிந்தேசுவரி பிரசாத் மண்டல்** (பி. பி. மண்டல்) என்பவரின் தலைமையில், 1978 ஆம் ஆண்டு சனதா அரசால் அமைக்கப் பெற்று, இந்தியாவில் உள்ள பிற்படுத்தப் பட்ட மக்களுக்குச் சாதி எண்ணிக்கை விழுக்காட்டின் அடிப்படையில் அரசுப் பணிகளில் வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று, 1980-இல் தீர்வு செய்யப் பெற்ற ஓர் ஆய்வு அறிக்கை ஆகும். அதில் முன் கூறிய நடுவணரசுப் பணிகளில், குமுகாய அமைப்பில் சாதி நிலைகளால் பிற்படுத்தப் பெற்ற இன மக்களுக்கு, 27 விழுக்காடு இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்று கூறப் பெற்றுள்ளது. தாழ்த்தப் பெற்றவர்களுக்கும், மலை வாழ் மக்களுக்கும் ஏற்கனவே இட ஒதுக்கீடுகளுக்கு வழி செய்யப் பெற்றுள்ளன.

மொத்தம் 430 பக்கங்கள் கொண்ட மண்டல் குழு அறிக்கை, சாதிய அளவில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைக்க வேண்டிய நடுவணரசுப் பணி வாய்ப்புகளையே முழு நோக்கமாகக் கொண்டு வரையறை செய்யப் பெற்றதாகும் என்பதில் ஐயமில்லை. **சாதியொழிப்போ குமுகாயச் சமநிலையோ அதனுடைய நோக்கமன்று.**

இருக்கின்ற மத வேறுபாடுகள், சாதி வேறுபாடுகள், பிறப்பை அடிப்படையாகக் கொண்ட ஏற்கனவே உள்ள ஒரு குமுகாய அமைப்பை மாற்றி, வேறொரு முன்னேற்றமான வேறுபாடற்ற ஒரு புதிய குமுகாய அமைப்பைக் கருத்தில் கொண்டு செய்த முடிவுகள் அல்ல, இம் மண்டல் குழு முடிவுகள்.

தற்போது அப்படியே நடைமுறையில் உள்ள ஆனால் ஏற்கனவே அமைந்து இறுகி விட்ட ஒரு சாதியமைப்புக் குமுகாயத்திலேயே, ஏற்படுத்தப்பட்ட சாதிகளாகக் கருதப்பெறும் சாதியினங்களை வேறு பிரித்து அறிந்து, அவற்றுக்கும் அரசுப் பணிகளில் முன்னேற்ற வாய்ப்புகளைத் தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தீர்வு செய்யப் பெற்றதாகும் இக் குழு அறிக்கை.

எனவே, சாதிகளை அப்படியே ஒப்புக் கொண்ட தன்மையிலேயே, இம் மண்டல் குழு அறிக்கை செயல்படுத்தப் பெறும் என்பது தெரிகிறது. ஆகையினால், இவ்வறிக்கைச் செயற்பாடு ஒரு வகையில் சாதிப் பிரிவுகளை அப்படியே நிலை நிறுத்துவதற்கும் பயன்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டியும் உள்ளது. ஆனால், சாதி வேறுபாடுகளை அத்துணை விரைவில் ஒழித்து விட முடியும் என்னும் நம்பிக்கையற்ற தன்மையால், அவை இருக்கும் வரை, சலுகைகள் இவற்றின் அடிப்படையால் கொடுக்கப் பட வேண்டிய கட்டாயத்தை நமக்கு உருவாக்கித் தந்துள்ளதாகவே நாம் கருத வேண்டும். சாதி இருக்க வேண்டும் என்பது மண்டலுடையதோ, அல்லது நம்முடையதோ ஆன கருத்தன்று. மக்களின் பின்தங்கிய அல்லது முன்னேறிய தன்மைகளைக் கண்டு அறிவதற்கு, இச் சாதியமைப்பே தலையான—முகாமையான ஓர் அளவீடாக, இன்றைய அளவில் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இவ் விந்திய நாடு பல்வேறு வகைச் சிக்கல்களுக்குரியதான ஒரு நாடாக இருந்து வருவதை நாம் எல்லாரும் அறிவோம். பல்வேறுபட்ட நிலைகளில், பல்வேறு வகைப்பட்ட இன மக்கள் முன்னேற்றம் இன்றித் தாழ்த்தப்பட்டும், பிற்படுத்தப் பட்டுந்தாம் உள்ளனர். அவர்கள் அனைவரையும் அரசியல் என்னும் நிலையிலோ அல்லது பொருளியல் என்னும் ஒரு நிலையிலோ மட்டும் 'சலுகை' தந்து முன்னேற்றி விட்டால் மட்டும் போதும் என்று நினைதது விடக் கூடாது. இதில் தவிர்க்க முடியாத ஓர் இக்கட்டான நிலை என்னவென்றால், நம் மக்களிடை உள்ள எந்த சாதிப் பிரிவு ஒழிக்கப் பெற வேண்டும், மக்களெல்லாம் சாதி வேறுபாடற்ற ஒரே மக்களினமாக மதிக்கப் பெற வேண்டும் என்று அன்று முதல் இன்று வரை உள்ள பொதுமை நல அறிஞர்கள் கருதினார்களோ, நாமும் கருதுகின்றோமோ, அதே சாதிப் பிரிவுகளை நிலை பெறச் செய்யுமாறு, அவற்றின் அடிப்படையிலேயே அவர்களின் முன்னேற்றத்திற்குரிய திட்டத்தை வகுத்துக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது என்பதுதான். இது நம் நிலையில் பெரிதும் வருந்துவதற்கும் இரங்குவதற்கும் உரிய அவலமான சூழலாகும்.

இந்நிலையில் இன்னொன்றையும் கருத வேண்டியவர்களாக நாம் உள்ளோம். ஆண்டாண்டுக் காலமாக, எதிர்பாராமல் இறுகி விட்ட சாதி அமைப்புக் குமுகாயத்தில், உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு, தன் ஆளுமை ஆட்சி அதிகார ஆற்றல்களால் நீண்ட நெடிய வளமான வாழ்க்கை வசதிகளைப் பெற்று வந்த மேல் சாதிக் கூட்டமும், தன் பொருளியல் வலிமையால் அவற்றை விலை பேசி வளைத்துப் போட்டுக் கொண்டு, தன்வயப் படுத்தியிருந்த வணிக வாய்ப்புக் கும்பலும், தம் சாதி வெறியையும் பண வெறியையும் விட்டுக்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தமிழ்மொழியின் காலம் 34,000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது!

அண்மை அகழ்வாராய்ச்சியில் கண்ட வியத்தகு உண்மை!

அண்மையில் அகழ்வாராய்ச்சி அறிஞர்கள் சிலர் நெல்லை மாவட்டம், தென்காசிக்கு அருகிலுள்ள சாயர்புரம் என்னும் சிற்றூர்ப் புறத்தில் உள்ள ஒரு காட்டில் நிலத்தைத் தோண்டுகையில், மிகப் பழங்காலத்தைச் சேர்ந்த ஒரு மட்பாண்டத்தைக் கண்டெடுத்தனர்.

இது மட்பாண்டமே ஆனாலும் இன்றைய பீங்கான் பாண்டத்தை விட வழ வழப்பாகவும் வலிவானதாகவும் இருப்பதை அவர்கள் கண்டார்கள். அதனைக் கரிம முறையில் ஆய்வு செய்து பார்க்கையில் அவர்கள் மிகவும் வியந்தார்கள்.

அம் மண்பாண்டம் மிகத் தொல்பழங்காலத்தைச் சேர்ந்தது என்று பல வகையிலும் ஆய்ந்து முடிவு கண்டார்கள். அதன் செய்நேர்த்தியும் அவர்களை மிகவும் திறும்பூது கொள்ளச் செய்தது. அதன் காலம் 34000 (முப்பத்து நான்காயிரம்) ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த மண்பாண்டத்தின் மேல் சில வரி வடிவக் கோடுகளும் இடம் பெற்றிருந்தன. அவை சிந்துவெளி நாகரிக எழுத்துகளின் முந்தைய வரி வடிவங்களாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உறுதி செய்தார்கள்.

இங்குக் கண்டெடுக்கப் பெற்றுள்ள மற்றுமொரு முகாமையான பொருள் முப்பட்டை வடிவில் அமைந்த ஒரு கூர்முனைக் கல்லாகும். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் அது கூர்மழுங்காமல் இருப்பதைக் கண்டார்கள். இதனைக் கொண்டு இப்பொழுதும் மிகத் திண்மை வாய்ந்த விலங்கின் தசைகளை மிக எளிதாக அறுக்க முடிவதாக அவர்கள் கூறுகிறார்கள். இதனுடைய காலமும் 34000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்று கரிம முறைக் கால ஆராய்ச்சி உறுதி செய்கிறது.

இவற்றுடன் அவர்கள் ஆராய்ந்த நிலப் பகுதியில் இரும்புத் துகள்களும், கொல்லுலையும், இரும்புப் பட்டடைகளும் இருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு, அங்குள்ள தாமிர வருணி ஆற்றுப் படுகையில் இருந்து மாழைத்துகள்கள் (உலோகத்துகள்கள்) அகழ்ந்தெடுக்கப் பெற்று, அவற்றைக் கொண்டு இரும்புக் கருவிகள் செய்யப் பெற்றிருக்கலாம் என்று கருதப் பெறுகிறது அவற்றுக்கான தடயங்களும் அவர்களால் அகழ்ந்தெடுக்கப் பெற்றுள்ளன.

இச் சாயர்புர அகழ்வாராய்ச்சி முடிவுகளைக் கொண்டு, தமிழர்களின் நாகரிகமும், தமிழ்மொழியும் மிகப் பழங்காலத்தைச் சேர்ந்தவை என்பது உறுதியாக மெய்ப்பிக்கப்பட்டு விட்டது என்றே கூறுதல் வேண்டும்.

தமிழரின் நாகரிகப் பழைமையும், தமிழ்—மொழியின் 34000 ஆண்டுக்கு முற்பட்ட தோற்ற வரலாறும், தமிழினப் பகைவர்களால் வேண்டுமென்றே மூடி மறைக்கப்பட்டும் நம்பப் பெருமலுமே இருந்து வந்தன. வரலாற்றாசிரியர்களும் இதுவரை சிந்துவெளி நாகரிகப் பழைமையே தமிழினத்தின் பழமை என்று கூறி வந்தனர். வின்செண்டு சுமித் போன்ற நடுநிலையான ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களே, தமிழினமும் தமிழ்மொழியும் மிகப் பழைமை வாய்ந்தன என்றும், அதனால் இந்திய வரலாற்றை மிகச் சரியாக உணர வேண்டுமானால், ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சியை வடக்கிலிருந்து தெற்காகத் தொடங்காமல், தெற்கிலிருந்து வடக்கு நோக்கித் தொடங்கி நடத்த வேண்டும் என்று கூறினார்கள்.

நம் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழ்மொழி 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறியது வெறும் கற்பனை முடிவன்று; உண்மை வரலாற்றாய்வின் முடிவே என்பதை உலகம் இக்கால் உணர்ந்து வருவது நமக்குப் பெருமை தருவதாகும். O

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு...

மறைந்த திராவிடவியல் வரலாற்றுப் பேரறிஞரும், பன்மொழிப் புலவரும் ஆகிய கா. அப்பாத்துரை அவர்களின் குடும்ப நலக் கொடை வேண்டுகோள் தென்மொழி சுவடி 25 ஓலை 5-இலும், தமிழ்நிலம் 134-இலும் வெளிவந்துள்ளதற் கேற்ப, அன்பர்களும் அருளாளர்களும் அவர் குடும்பத்திற்கு நன் கொடைகளை வாரி வழங்கி வருகின்றனர். நீங்களும் அவ் வருட்கொடை அருளாளர் வரிசையில் இடம் பெற வேண்டாமா? அவ்வாறாயின் நீங்கள் இன்றே இன்னே நம் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் துணைவியாருக்குக் கீழ் உள்ள முகவரிக்கு உங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பிவிட்டுத் தென்மொழிக்கும் ஓர் அஞ்சலட்டையில் செய்தியை தெரிவியுங்கள். தொகை விடுக்கவேண்டிய முகவரி:

திருவாட்டி அலர்மேலு அப்பாத்துரை
10, அப்பாத்துரையார் தெரு, சென்னை-18.

காட்டுத் தீ போல்வது விடுதலைப் போர்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

பேராசிரியர் ஒருவர் (அமெரிக்கர்) என்னையும், வேறு மாணவர்கள் சிலரையும் இரவு உணவுக்காகத் தமது வீட்டுக்கு அழைத்திருந்தார். உணவுக்குப் பின் எல்லாருமாகக் கூடிப் பல செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அமெரிக்கப் பேராசிரியர் இந்தியாவின் இக்கால நிலைகளைப் பற்றி ஓரளவு தெரிந்தவர். அவர் இந்தியாவின் மொழிச் சிக்கல் இப்போது எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார்- என்னைத் தவிர வேறு தமிழர்களும், இந்திக்காரர்களும், பிற இந்தியத் துணைக் கண்டத்தவரும் அங்கிருந்தார்கள்.

நான் "நாளுக்கு நாள் இந்தித் திணிப்பு அதிகமாகிக் கொண்டு வருகிறது. முன்னைப் போல நேர்முகமாகத் திணிக்காமல், மறைமுகமாகத் திணிக்கிறார்கள்'' என்றேன். அது கேட்ட இந்திக்கார மாணவர் ஒருவர் "தமிழர்களைத் தவிர வேறெல்லாரும் இந்தியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தமிழர்கள் விரும்பினாலும். விரும்பாவிட்டாலும் 21-ஆம் நூற்றாண்டு தொடங்கும் போது இந்தி தனக்குரிய இடத்தைப் பெற்றுவிடும். இந்தி படித்தால்தான் சம்பளம், வயிற்றுக்குச் சாப்பாடு என்ற நிலை வந்ததும், தமிழர்கள் நான் முந்தி, நீ முந்தி என்று இந்தியைப் படிப்பார்கள்,'' என்று சொன்னார். உடனடியாகத் தமிழ் மாணவர் ஒருவர் "நாம் எத்தனையோ பாடங்களைப் படிக்கிறோம். இந்தியையும் இன்னொரு பாடமாகப் படித்தால் ஆயிற்று'' என இந்தித் திணிப்புக்குச் சார்பாகப் பேசினார்.

அது கேட்ட நான் "என்னை உங்கள் தலைமேல் ஏற்றி வைத்துச் சுமந்து திரிகின்ற வலிமை உங்களுக்கு உண்டு. அதனால், இன்றிலிருந்து நான் உங்கள் தலைமேல் ஏறி உலா வரலாமா? கூடாது! அது போல்தான் இந்திப் படிப்பு என்ற சுமையும். இந்தியைப் படிக்கும் ஆற்றல் தமிழருக்கு உண்டு என்ற காரணத்தால், தமிழர்கள் இந்திச் சுமையைத் தாங்கிட வேண்டுமென்பதில்லை. இந்தி என்ற சுமையைத் தமிழன் தூக்கிக் கொண்டு திரிய, இந்திக்காரர்களோ அச் சுமையின்றி, அறிவியல், கணிதம் மற்றும் பிற பாடங்களை நன்கு படித்துத் தங்கள் இனத்தின் வருங்காலத்தை முன்னேற்றிக் கொள்வார்கள். தமிழைப் படிக்கும் ஆற்றல் இந்திக்காரர்களுக்கும் உண்டு. தமிழை இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக்கி, இந்திக்காரர்களுக்குத் தமிழைக் கற்பித்தாலென்ன? அது கூடாது, அது தமிழ்த் திணிப்பு'' என்று கூறினேன். இவ்வாறாக இந்தி வேண்டுமென்பாருக்கும், வேண்டாமென்பாருக்குமாக ஒரு சிறிய வழக்குரையே (வாக்கு வாதமே) நடந்தது, இவ் வழக்குரை சற்றே சூடேறுவதைக் கண்ட அமெரிக்கப் பேராசிரியர் பேச்சை வேறு பக்கமாகத் திருப்பினார். வேறு செய்திகள் குறித்துப் பேச்சு தொடர்ந்தது.

மேற்கூறிய நிகழ்ச்சி தமிழர் சிலரின் தமிழின உணர்வின்மையை வெளிப்படுத்துகிறது. இந்தித் திணிப்புக்காகப் பரிந்து பேசியவர் ஒரு **பச்சைத் தமிழர்தாம்.** நல்ல அறிவும், படிப்பும் உள்ளவர் தாம். ஆனால் **தமிழின உணர்வுதான் இல்லை.**

இது போலத் தமிழின உணர்வற்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தமிழகத்தில் உள்ளார்கள். இவ்வகையார்க்குத் தமிழினவுணர்வினை ஊட்ட வேண்டியதும், தமிழக விடுதலைக்கான இன்றியமையாமைகளை உணர்த்த வேண்டியதும் தேவைதான். ஆனால் தமிழின உணர்வற்ற தமிழர்களையெல்லாம் தமிழ் நெஞ்சங்களாக்குவதென்பதோ, தமிழக விடுதலை விரும்பிகளாக்குவதென்பதோ, தமிழக விடுதலைப் போராளிகளாக்குவதென்பதோ, தமிழக விடுதலைப் போருக்குத் துணை நிற்போராக்குவதென்பதோ இயலா. இக்கால் தமிழின உணர்வற்றிருப்போரிற் சிலரைத் தமிழக விடுதலைக்குப் பொருளளவிலும், செயலளவிலும் துணை நிற்போராக்கலாம். சிலரைத் தமிழக விடுதலைப் போராளிகளாக்கலாம். ஆனால் முழுக்க முழுக்கத் தமிழரனைவரையும் தமிழின உணர்வுடையவர்களாக ஆக்கி விட முடியாது.

தமிழர்களனைவரும்—அல்லது தமிழர்களிற் பெரும்பான்மையோர்—தமிழக விடுதலைப் போரில் ஈடுபடும் வரையிலும் தமிழக விடுதலைக்கான செயல்கள் தள்ளிப் போடப் பட வேண்டும் என நினைப்பது, தமிழினத்தை மேலும் மேலும் அடிமைக் குழியில் ஆழப் புதைப்பதாகவும், அவ்வடிமைக் குழியினின்று வெளியேறும் வாய்ப்பேயின்றித் தலைமீது மண்ணை வாரிப் போடுவதுமாகவே அமையும்.

காலங் கடக்கக் கடக்க அடிமைத்தளை இறுக்கமாகி, அத் தளையினின்று மீள்வது மேலும் மேலும் கடினமாகும். இந்தியத் துணைக் கண்டத்தினின்று வெள்ளைக்காரன் வெளியேறி 43 ஆண்டுகளாகின்றன. இந் நாற்பத்து மூன்றாண்டுகளில், தமிழினத்தின் ஆட்சி உரிமைகள் படிப்படியாகக் குறைந்து வந்திருக்கின்றனவேயன்றி, ஓர் இம்மியளவு கூட அதிகமாகவில்லை. இந்திக்கார மாநிலங்களான உத்திரப் பிரதேசத்தோடும், மத்தியப் பிரதேசத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்

Scanned with CamScanner

போது, தமிழ்நாட்டின் பொருள் நிலை மற்றும் பொதுப் பணிகள் (புதிய சாலைகள், புகைவண்டிப் பாதைகள், மருத்துவமனைகள் ஆகியன) நலிந்து பட்டன. கடந்த 43 ஆண்டுகளில் பல ஆயிரங்கோடிக்கணக்கான தமிழனின் வரிப்பண உருபாக்கள் இந்திக்கார மாநிலங்களான உத்திரப் பிரதேசத்தையும், மத்தியப் பிரதேசத்தையும் வளப்படுத்தப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இங்கோ தமிழ்நாட்டிலோ—படித்தாலும் வேலை கிடைக்க வாய்ப்பில்லை; உழைப்பாளியும், உழவனும் அரைப் பட்டினி வாழ்க்கை நடத்துகிறான். தமிழ் நாட்டின் சிறு முதலாளிகளை வடநாட்டு முதலாளி விழுங்கி ஏப்பம் விடுகிறான். தமிழ்நாட்டின் தொழில்களும், நிலங்களும் வடஇந்தியனுக்குச் சொந்தமாகின்றன.

எல்லாத் தமிழரும்—அல்லது பெரும்பான்மையான தமிழர்கள்-தமிழக விடுதலைக்கான போராட்டங்களில் ஈடுபடும் வரை, தமிழக விடுதலைக்கான செயற்பாடுகளைத் தள்ளிப் போட வேண்டும் என்று கருதிடலாகாது. எந்தவொரு விடுதலைப் போரும் மக்களனைவரும் அப்போரில் ஈடுபடவேண்டும்—துணை நிற்க வேண்டும்—என்று கருதிக் காலம் கடத்தப் படவில்லை.

இருநூறாண்டுகளுக்கு முன் நடந்த அமெரிக்க விடுதலைப் போரைப் பார்ப்போம். அவ் விடுதலைப் போர் தொடங்கியபோது, அமெரிக்க மக்களனைவரும் ஒட்டு மொத்தமாக அப் போரில் ஈடுபடவில்லை—துணை நிற்கவுமில்லை. நாளடைவில் போர் முயற்சிகள் பரவலாகி, விடுதலை கிடைத்தது. நாற்பதாண்டுகளுக்கு முன்னால் சீனாவில் நடந்த புரட்சியைப் பார்ப்போம். அப் புரட்சியின் தொடக்கக் காலத்தில் அதற்குத் துணை நின்றார் மிகச் சிலரே. அச்சிலரின் துணையுடனேயே புரட்சிப் போர் தொடங்கியது. நாளடைவில் பரந்து பட்டது. வெற்றியும் பெற்றது

எந்தவொரு விடுதலைப் போரும் வெற்றி பெற வேண்டுமானால், இருவகையான செயல்கள் தேவைப்படுகின்றன. விடுதலைக்கான தேவையை மக்களுக்கு உணர்த்துவது ஒரு செயல். விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி நடத்துவது இரண்டாம் செயல். முதற் செயலை மட்டும் செய்து விட்டு, இரண்டாம் செயலைக் காலந் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருப்பது விடுதலைக்கு வழி வகுக்காது.

விடுதலைப் போர் என்பது காட்டுத் தீ போன்றது. காட்டுத் தீ பரந்து எரிய வேண்டுமென்றால், எல்லா மரங்களும் தொடக்கத்திலேயே காய்ந்து, உலர்ந்து இருக்க வேண்டியதில்லை. ஒரு சில மரங்கள் நன்கு உலர்ந்திருந்தால் போதும். ஒரு துளி தீக்கனல் பட்டு அம்மரங்கள் சிறிய அளவில் எரியத் தொடங்கும். அது விளைக்கின்ற வெப்பம், பக்கத்து மரங்களையும் காய வைக்கும்-உலர வைக்கும—தீப் பற்ற வைக்கும். விடுதலைப் போர் என்ற தீயும் அதுபோல்தான். விடுதலை உணர்வும், ஈக உணர்வும், மிக்க ஒரு சிலரே விடுதலைப் போரைத் தொடங்கி வைப்பர். அப்போர் பிறருக்கும் விடுதலை உணர்வை ஏற்றி வைத்து, விடுதலைப் படை மெதுவாக, படிப்படியாக வளரும். நாளடைவில் வெற்றியும் பெறும். இதுவே வரலாறு தரும் பாடம் O

கலைஞரைப் பின்பற்றுபவர் வெறும் நிழல்களே!

சென்ற தமிழகச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், எதிர்க் கட்சிக்காரர்கள், ‘கலைஞர் தமிழ் நாட்டில் தனித் தமிழ் நாட்டுப் பிரிவினையாளர்கள் வளர வாய்ப்பளிக்கின்றார்’ என்று அவர் மேல் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள்.

அதற்கு அவர் விடை கூறும் வகையில், ‘தமிழகத்தில் தமிழ்நாட்டுப் பிரிவினையாளர்கள் இல்லை; அப்படி ஓரிருவர் இருந்தாலும் அவர்களை அவர்களின் நிழல்கள் கூடப் பின்பற்றுவதில்லை’ என்று கெட்டிக்காரத்தனமாகப் பேசியுள்ளார்.

கலைஞர் இக் கருத்தை யாரையோ எண்ணிக் கொண்டு பேசவில்லை. நம் போன்றவர்களை நினைவில் கொண்டே, நம்மின் இயக்க வலிவின்மையை எள்ளுவது போலவும், அதே சமயத்தில் எதிர்க் கட்சிக்காரர்களின் வாய்களை அடக்குவது போலவும், அவருக்கே உரிய வகையில் நையாண்டி செய்து பேசியிருக்கிறார்.

இவ் விடத்தில், நம்மை அவர் எள்ளல் செய்து பேசியதற்காக நாம் துளியும் வருந்தவில்லை. ஏனெனில், ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு’ என்று பேச்சளவில்தான் அண்ணாவும் அவர் தம்பிகளும் பேசி வருவார்கள். ஆனால், கொள்கையளவில அவர்கள் கருதுவது, ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமில்லை’ என்பதே!

இனி, கலைஞரின் அந் நக்கல் பேச்சுக்கு நாம் விடை கூற விரும்புகிறோம். நம்மை நம் நிழல்கள் கூடப் பின்பற்றுவதில்லை என்பது ஒருவேளை உண்மையாகவே இருக்கலாம். ஏனெனில் நம் கொள்கை பின்பற்றுவதற்கு அத்துணை எளிதானது இல்லை; மிகக் கடினமானது. ஆனால், இத்தனைப் பெரிய இயக்கத்தை வைத்துக் கொண்டிருப்பதாக மறைமுகமாகப் பெருமைப் பட்டுக் கொள்ளும் இவரைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் வெறும் நிழல்களே; உயிருள்ள உருவங்கள் அல்ல—என்பதைக் கலைஞர் இனியேனும உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்க்கு அன்புடன் எடுத்துக் கூற விரும்புகின்றோம். அவர் எண்ணிப் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்வாராக! O

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம்!

1. பாடநூல்களும் இந்து முன்னணியும்!

தமிழினமே,

மக்கள் உரிமை மேல் நமது நம்பிக்கை, அழுத்தமானது. இதற்காக நாம் 'இந்து முன்னணி' யின் 'உரிமை'யை ஏற்க மாட்டோம். ஏனெனில், அதன் கருத்துகள் உயர்சாதி, மதச் சார்புடையன! மக்களுக்குக் குறிப்பாக எதிரானவை!

இராமன், இராவணப் போர், இரு கருத்தியல்களின் முரண்பாடும், ஒற்றுமையும் கொண்டது. எனவே, முரண்பாட்டில் எழும் கருத்துகளைச் சொல்வதும், உடன்பாட்டில் உண்டாகும் எண்ணங்களைச் சொல்வதும் பொதுவாக மக்கள் அனைவர்க்கும் உள்ள உரிமை ஆகும்.

கடந்த காலத்தில் 'இராவண காவியம்' தடையிலிருந்தது. அதன் சார்புடைய் இன எழுச்சியால் 'தடை' உடைந்தது. எனவே, 'இராமகாதை'க்குள்ள 'இடம்' கிடைக்காவிடினும் 'இராவண காவியத்திற்குரிய 'இடம்' கொடுக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு உள்ளது. பன்னூற்றாண்டுக் காலமாக இழந்த உரிமை, மீண்டும் ஓரினத்திற்குக் கிடைக்கும் ஒரு சிறு துளி வாய்ப்பையும் 'இந்து' என்கிற பேரால் தட்டிப் பறிக்க நடக்கும் சூழ்ச்சியே 'இந்து முன்னணியின்' 'கண்டனக் குரல்' எனலாம்!

உரிமை மீட்புப் போராட்டத்தில் பெற்ற சிறு வெற்றியே, புலவர் குழந்தையின் இராவண காவியப் பகுதியைத் தமிழ்ப் பாட நூலில் சேர்த்திருப்பதாகும்!

தமிழனை, ஆரியன் ஆண்டாண்டுக் காலமாக இழிவு படுத்தி அடிமைப் படுத்தி வந்திருக்கிறான். அத் தமிழன் தன் அடிமை நிலையை உணர்ந்து பாடுகின்ற பாவியமும் 'ஆரியர்க்கு'க் கசப்பாகப் படுகின்றது.

மேலும், கல்வியில் கருத்துரிமை—கருத்துக்கான மக்கள்(சன)நாயகத்தை மறுக்கும் இந்து முன்னணி என்கிற அமைப்பு கண்டனத்திற்குரியதாகும்!

அப்படியே 'இந்து' சமயத்திற்கு எதிரானதென்றாலும், தமிழர் தம் மெய்யியல் நோக்கிற்கு உடன்பாடான செய்திகளைத் தமிழக அரசு தனது பாடத்திட்டத்தில் வழங்குவதை மறுத்திட இந்திய அரசுக்கு உரிமை இல்லை என்றே கூறல் வேண்டும்!

2. கலைஞர்கள்...!

அதியமான் வில்லிசைக் குழுவினை உ.த.மு.க. வளர்ச்சிக்குப் 'பயன்படுத்திக் கொள்ளுதல்' குறித்து விரிவான மடல் எழுதியுள்ளார். அதன் தேவையை உ. த. மு. க. உணரும். வில்லிசைக் கலைஞர்களை நாம் 'பயன்படுத்திக் கொள்ளுதல்' கூடாது. அவர்களும் நம்மைப் பயன்படுத்திக் கொள்ள விட மாட்டோம். இப்படிச் சொல்வதால், நாம் 'உருப்படி' ஆக மாட்டோம் என்று சிலர் நினைத்தல் கூடும்.

நாம் பண்டங்களையும், பொருள்களையும் 'பயன் படுத்தலாம். அவற்றின் பயன் தீர்ந்த பின் அவற்றைக் 'குப்பைத் தொட்டியில்' வீசலாம். கலைஞர்களை அப்படிப் பட்டவர்களாகக் கருதுவது முதலாளியச் சிந்தனை ஆகும். கலைஞர்கள் தொழிற் கலைஞர்களாகவும், கொள்கைக் கலைஞர்களாகவும் இருக்கிறார்கள்.

நம் கலைஞர்கள், கொள்கையாளர்களாக இருப்பார்கள். அப்போதுதான், கலையின் தேவையும் கொள்கையின் இணைவும் பற்றிப் புரிந்து செயல்படுவார்கள்.

தமிழின முன்னேற்றம், வளர்ச்சி குறித்த நிகழ்ச்சி அமைப்புகளைக் கொண்டு இயங்கும் 'அதியமான் வில்லிசை—கலைக்குழு,' ஒரு கொள்கை சார்ந்த அமைப்பாக வளரும் உள்ளடக்கம் கொண்டிருப்பதை உணர முடிகிறது. ஆகவே, அதன் வளர்ச்சியில் ஈடுபாடு காட்டத் தமிழின ஆர்வலர் அன்பரை வேண்டுவோம்; தூண்டுவோம்.

3. 'தினமணி—காந்தியம் ஒரு கேள்வி...மறுமொழி கேட்டன்று!

"தங்களின் உரிமைகளைப் பெறப் பிசி இந்திய மரபினர் காந்திய வழியில் கிளர்ச்சி செய்தால் வெற்றி காண்பது திண்ணம்'—தினமணி 31-7-90 ஆசிரியவுரை.

'காந்திய' வழியில் சென்ற...தமிழீழப் போராட்டம்' பற்றி அன்றும் இன்றும் 'தினமணி' என்ன கருத்து வைத்துள்ளது?

'இலங்கை'யிடமிருந்து 'தினமணி' எந்தப் படிப்பினையும் பெறவில்லையா? இல்லை தேவை இல்லையா?

இந்தியாவில் நடக்கும் 'காந்திய வழிப் போராட்டம்' யாவும், வெற்றி பெற முடியாமல் போவதேன்? அவை, தடுக்கப் பெறுவதேன்?

'இந்திய மரபில்' — தமிழீழ மக்களைத் 'தினமணி' ஏன் சேர்த்துப் பார்க்கவில்லை. அவர்களின் 'தமிழீழ விடுதலை' பற்றிய 'தினமணி'யின் திட்டவட்டமான கொள்கை என்ன? வழிமுறை—'அமைதி'யா? 'வன்முறை'யா? எனத் தீர்மானிக்க வேண்டியவர்கள்...யார்? அரசா, மக்களா? இல்லை இருவருமா? O

Scanned with CamScanner

தமிழ்த் தேசியத் தன்னுரிமைச் சிந்தனையாளர்களுக்கு...!

தமிழ்நாட்டு இளைஞர்களே, மாணவர்களே, பொது மக்களே...

—இன்றைக்கு இந்தியா-என்பது
பல இன மக்களையும் ஒடுக்கி ஆளுகிற
ஒரு துணை வல்லரசாகவே உள்ளது.

தமிழ்நாட்டில், தெலுங்கு நாட்டில், கருநாடகத்தில்
வங்காளத்தில், பஞ்சாபில், காசுமீரில்—
இப்படி ஆங்காங்கே கிடைக்கிற
கனிவளமோ, விளைச்சல் பொருள்களோ
அந்த அந்த நாட்டு இன மக்களுக்கு இல்லை.

தமிழ்நாட்டின் 'பெட்ரோல்' தமிழனுக்கு இல்லை;
தமிழ்நாட்டின் நிலக்கரி தமிழனுக்கு இல்லை;
தமிழ்நாட்டின் தேயிலை தமிழனுக்கு இல்லை.

—உதகை மலைப் பகுதிகளையே மொத்தமாக
டாட்டாவும், புருக் பாண்டும், லிப்டனும்
பிடித்துக் கொண்டு நாம் அங்குப் போனால்
'சலோ', 'சலோ—என்கிறான்.

தமிழ்நாட்டுச் சர்க்கரை தமிழ்நாட்டுக்கு இல்லை!

—பத்தாண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் 3-சர்க்கரை
ஆலைகள் இருந்த போதும் தமிழனுக்கு
சர்க்கரை கிடைக்கவில்லை; இன்று
38 ஆலைகள் இருந்த போதிலும்
சர்க்கரை கிடைக்கவில்லை,

ஒரு கோடி கல்லெடை (டன்னு)க்கும்
மேலாக உருவாக்கம் ஆனாலும்
அணுமின் நிலையம்—என்கிற
எமன்களை நம் மடியில் கட்டிவிட்டு
அதற்கு மாற்றாக 3000 கோடி உருபா
மதிப்பிற்கு உருசியாவிற்குச் சர்க்கரையாகவே
அனுப்பிக் கொண்டிருக்கிறது, இந்திய அரசு.

தமிழ்நாட்டின் தொழில் வருமானம் தமிழனுக்கு இல்லை!

—தமிழ்நாட்டில் உருவாக்குகிற
எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும்
அது வெளிநாட்டுக் கூட்டுடனே செய்யப் படுகிறது.

வெளிநாட்டுக் கூட்டு என்றால் அவர்களுக்கு
ஊதியத்தில் பெரும் பங்கு கொடுக்க
வேண்டும்.

இப்படியாக, அவர்களின் கொள்ளையால்,
தமிழ்நாட்டின் தொழில் வருமானம்
தமிழனுக்குக் கிடைப்பது இல்லை.

தமிழ்நாட்டுத் தொழிலகத்தில் தமிழனுக்கு வேலை வாய்ப்பு இல்லை!

—நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஆகட்டும்;
சேலம் உருட்டாலை ஆகட்டும்;
நரிமணம் கன்னெய்க் (பெட்ரோல்) கிணறு ஆகட்டும்;

எல்லா இடங்களிலும், பெரும்
பதவிகளில் இருப்பவர்கள் பிறநாட்டினரே.
இந்தி படித்தால்தான் வேலைவாய்ப்பு!
இந்தியே இந்தியாவின் அலுவல் மொழி
என்று நடைமுறையில் வைத்துக் கொண்டு,
தமிழன் தன் தாய்மொழியைப்
படிக்கவும், பயன்படுத்தவும் முடியாத
இரண்டாந்தரக் குடிமகனாக ஆக்கப்படுகிறான்.

—இப்படி எதுவுமே தமிழனுக்கு இல்லாத நிலையில்
தமிழன் தன்னைத் 'தமிழன்'—என்றுகூட
சொல்ல முடியாமல் 'இந்தியனாகச்'
சொல்ல வைக்கப்படுகிறான்.

ஆங்கிலம் பேசுகிறவன்தான் ஆங்கிலேயன்;
சீனம் பேசுகிறவன்தான் சீனன்;
வங்காளம் பேசுகிறவன்தான் வங்காளி;
தமிழ் பேசுகிறவன்தான் தமிழன்.

ஆக, இந்தி பேசுகிறவன்தான் இந்தியனாக முடியும்.
தமிழன், மொழியாலும் சரி, இனத்தாலும் சரி,
அரசாலும் சரி, பண்பாட்டாலும் சரி,
பொருளியலாலும் சரி, நாட்டாலும் சரி-
இந்தியனாக முடியாது.
—எனவே தமிழர்களே!
இந்தியாவில் நாம் அடிமைப்பட்டு,
நம் மொழி இழந்து,
நம் விளைச்சல்பொருள்களை இழந்து,
நம் கனிவளம் இழந்து,
நம் வாழ்க்கையையே இழந்து,
வாழ்கிற அடிமை வாழ்வைத்
தகர்க்க வேண்டாமா?
தமிழர் விடுதலை பெற வேண்டாமா?

தமிழர் நாடு என அனைத்துரிமையும்
பெற்ற, சுரண்டலற்ற, சாதியற்ற
ஒரு தமிழ்நாடு நாம் அமைக்க வேண்டாமா?

இந்தியா, இந்தியா என வெறுங் கூச்சலிட்டு,
இந்தியப் புரட்சிக்குக் காத்திருக்கும்
இந்தியக் கனவாளர்களே!
இந்திய ஒற்றுமை பேசும் இந்திய வெறியர்களே!
இந்தியத் துணை வல்லரசை
இந்திய அதிகார வெறியை
நம் தமிழ்த் தேசத்திலிருந்து எதிர்ப்போம்!
நம் தமிழ்நாட்டு விடுதலைக்காக முழங்குவோம்!

-தமிழ்நாடு இளைஞர் பேரவை
-தமிழ்நாடு மாணவர் பேரவை

Scanned with CamScanner

‘துக்ளக்’ சீனிவாசன்!

1-6-90 ஆம் நாளிட்ட துக்ளக் இதழில் திரு. பெ. சீனிவாசன் (ச. ம. உ.) தம் நேருரையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பற்றிக் கூறிய கருத்துகளின் அடிப்படையில் எழுதப்பெறுவது இஃது.

“பெருஞ்சித்திரனார் தமிழை வைத்து வியா-பாரம் செய்யும் ஓர் ஆள்.”—இது ச. ம. உ. பெ. சீனிவாசனின் கருத்தறிவிப்பு.

தமிழக ஆட்சியில் இன்று இருப்பவர்களும் சரி; நேற்று இருந்தவர்களும் சரி; இந்தக் கட்சி-யாளர்களை சார்ந்து கிடக்கும் தமிழ் ஆர்வலர்களும் சரி; இந்த இரண்டு கட்சிகளிடைத் தாவல் செய்து வாழ்க்கை நடத்தும் அரசியல் வணிகர்களும் சரி; பாவலரேறு பெருஞ்சித்திரனாரோடு தமிழ்மொழி அறிவிலோ, தமிழின நலனிலோ தமிழ்நாட்டுப் பற்றிலோ ஒப்புமை கூறத் தகுதி பெற்றவர்களே அல்லர்.

“தமிழ்” என்று சொல்லியே தங்களின் வயிற்றை வளர்த்துக் கொள்பவர்கள் தமிழின் ஆழத்தையும், அகலத்தையும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழினப் பண்பையும் முழுதுணர்ந்த பாவலரேறு அவர்களை “வியாபாரி” என்பதுதான் வேடிக்கை.

கடந்த காலங்களில் இக்கட்சிக்காரர்களால் விடுக்கப் பெற்ற அழைப்புகளைப் புறக்கணித்த சான்றோர் பாவலரேறு அவர்கள். அவர் அரசிய-லாளர்களைச் சற்றே சார்ந்து நின்றிருந்தாலும் வளமான பொருள் வாழ்வுக்கு உரியவராக இருந்-திருப்பார்- மாறாக, உண்மையான இதழின உணர்வுக் கருத்துகளுக்காக, அவர் போலும் சிலவாயிரம் உணர்வாளர்களுடன் எளிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் அவரை “வியாபாரி” என்று அரசியல் வணிகர் கூறுவது கண்டிக்கத் தக்கது.

நெருக்கடிக் காலத்தில் பாவலரேறு ஓராண்-டிற்கும் மேலாகச் சிறை வாழ்வு நடத்திவிட்டுத் தான் வெளிவந்தார். அதுவும் அவர் தி.மு.க.விற்-காகவா சிறைபுகுந்தார்? தனித் தமிழ்ப் பற்றாளர் என்பதனால் தானே!

இதே ச. ம. உ. சீனிவாசன் எவ்வளவு நாள் சிறையிருந்தார்? எப்படி வெளி வந்தார் எனக் கூற முடியுமா?

மன்னிப்புக் கடிதம் தனித் தமிழில்—தூய தமிழில்—எழுதினாராம்! அவர் எழுதுவதே, ஏன் பேசுவதே கூட தனித் தமிழ்தான். வேளைக்கொரு தமிழ், ஆளுக்கொரு தமிழ், பணத்திற்கொரு தமிழ், புகழுக்கொரு தமிழ், விளம்பரத்திற்கொரு தமிழ், என்பவெல்லாம் பாவலரேறு அவர்களிடம் கிடை-யாது.

மேலும், வெளிநாட்டுத் தமிழ்ச் செல்வர்கள், இந்நாட்டு அறிவியலறிஞர் திரு. கோ. து. வார் (ஜி. டி. நாயுடு) ஆகியோர் விரும்பி அளிக்க வந்த வளமான வாழ்க்கை நிலைகளைக் கூட மறுத்து விட்டவர் பாவலரேறு அவர்கள். ஏன்? தம் கருத்துக்கும், அவர்கள் கருத்துக்கும் சற்றே வேறு பாடு உண்டு என்பதால்.

இவ்வாறு தாம் கொண்டுள்ள கொள்கைக்-காகவே வாழ்ந்து வரும் பாவலரேறு “வியாபாரி”-யாம்!

—ஒரு வியாபாரி கூறுகிறார்!!

சுழன்றோடும் உலக உருண்டையில் தமிழ்-மொழி இருக்கும் வரை திருவள்ளுவம் இருக்கும். திருவள்ளுவம் வாழும் வரை வாழ்வார் பாவலரேறு!

ஆனால், அவரை “வியாபாரி” என்ற இவரும் இவர் போன்றோரும் பதவியிழந்த சில நிமையங்க-ளிலேயே மனைவி மக்களிடங் கூட மதிப்பிழந்து விடுவர்.

இவர்கள் தங்களைப் பெரிதாக எண்ணிக் கொள்ளட்டும். பாவலரேறு அவர்களைச் சிறுமைப் படுத்த எண்ணுவதுதான் அறியாமை ஆகும்.

—*மா. செ. தமிழ் மணி*
ஆட்டுப்பாக்கம் (அஞ்) அரக்கோணம் வட்.
வ. ஆ. மா. வ.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் தமிழ்த் தேசிய இயக்கத்தினர்!

கடந்த சூன் மாதத் தொடக்கத்தில் நடை பெற விருந்த ‘**தமிழ்த் தேசிய இயக்கத்**’தின், தமிழ்த் தேசியச் செயலறிவிப்பு (பிரகடன) மாநாட்டின் பொழுது, தஞ்சையில் பிடிபட்டுப் பொறுப்பில் விடுபட்ட 83 பேர்களில், முதல் நாள் பிடிக்கப் பெற்ற திருவாளர்கள் **சி. முருகேசன்** (தஞ்சை மாவட்ட அமைப்பாளர்), **அ. வியனரசு** (தஞ்சை மாவட்டச் செயலர்), **அ. மூர்த்தி** (பழ. நெடுமாறனின் உதவியாளர்) மூவரையும் மீண்டும் பிடித்து தமிழக அரசு, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், திருச்சி சிறையில் காவலில் வைத்திருப்பது அனைவரும் அறிந்ததே!

கண்காட்சி வைத்த குற்றத்திற்காக அவர்-களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் ஓராண்டுக் காவலில் வைத்தமைக்காகத் தமிழக அரசின் இக் கொடுமையான செயலை மிக வன்மையாகக் கண்-டிருக்கிறோம். அவர்களை மீண்டும் ஆய்வு செய்து விடுவிக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்-கிறோம்.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்காமலேயே, அவ்வாய்ப்பு வசதிகள் போய் விடக் கூடாதே என்று எண்ணுவதும், வர விருக்கின்ற மண்டல் குழுத் தீர்வால் கிடைக்க இருக்கின்ற வாழ்க்கை வசதி வாய்ப்புகளை இனியேனும் பெற்றுத் தன்னை ஈடேற்றிக் கொள்ளுதற்கு பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட ஏழை, பாட்டாளி, உழவாண்மை மக்கள் துடிதுடிப்புடன் முனைந்து நிற்பதும், அரசுக்குப் பல்வேறு வகையான இக்கட்டுகளையும் இடர்ப்பாடுகளையும் உண்டாக்கி வருவது பெரிய வாய்ப்புக் கேடே!

இவ் விரண்டு எக்குத்தொக்கான சூழலில்தான் இவ் வரசு இம் மண்டல் அறிக்கையைச் செயல் படுத்த வேண்டியுள்ளது. இதைச் செயல்படுத்துகின்ற வலிமையில் சாதிப் பிரிவுகளை ஞாயப்படுத்தவும், என்றென்றும் நிலைப்படுத்தவும் கூடாது; கூடவே கூடாது. அதே பொழுது, குமுகாயத்தில் இன்று மக்கள் சாதித் தன்மையில், கல்வித்தன்மையில், பொருளியல் தன்மையில்- ஆகிய மூன்று தன்மைகளிலும் பின்தங்கிய நிலைகளையும் ஒன்றுகவே கருதி மதிப்பிட்டு விடவும் கூடாது. ஒன்றுக்காக மற்ற இரண்டையும் குறைத்து மதிப்பிட்டு விடவும் கூடாது.

மண்டல் குழு தன் ஆய்வுக்கு 1961-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணக்கெடுப்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. முப்பது ஆண்டுகளுக்குப் பின்னுக அக் குழுவின் அறிக்கையை நிறைவேற்றப் புகும் இன்றைய காலகட்டத்தில் நிலைமை வேருகக் கூட இருக்கலாம். அதேபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சிற்றூர்களையும் ஒரு நகரப் பிரிவையும் மட்டுமே மண்டல் குழு தன் கள ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

அதுவுமன்றி 1953-ஆண்டு இதே நோக்கத்திற்காக காகா காலேல்கர் தலைமையில் அமைக்கப் பெற்ற ஆய்வுக் குழு, தன் அறிக்கையில், நாட்டில் உள்ள சாதிகளில் 2399 சாதிகளையே குமுக, மற்றும் கல்வி, பொருளியல் நிலைகளில் பிற்பட்ட சாதிகளாகப் பட்டியலிட்டிருக்கையில், மண்டல் தம் அறிக்கையில் 3743 சாதிகளைப் பட்டியலிட்டிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலிருந்து இன்னும் இவ் வாய்வு தேவைப் படுகிறது என்பதை உணரலாம்.

இவ்வாறு சில தொய்வு நிலைகள் இவ்வறிக்கையில் இருந்தாலும், இன்றைய நிலையில் இது செயற்பாட்டுக்குக் கொணரப் பட்டிருப்பது, பிற்படுத்தப் பெற்ற மக்கள் நிலையில் பெரிதும் பாராட்டுக் குரியது என்ருலும், இந்நிலைகள் இன்னும் திருத்தம் பெற்று முழுமை பெற வேண்டும் என்றே நாம் கருத வேண்டியுள்ளது. அந்நிலையில் நம் தமிழர்கள் எப்படி இருப்பார்களோ, எங்கு, இருப்பார்களோ, சொல்ல முடியாது.

இனி, இவ்வறிக்கையைப் பார்ப்பனரில் சிலர் வரவேற்கவும், சிலர் எதிர்க்கவும் செய்கின்ற நிலையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். பார்ப்பனர் எப்பொழுதும் எதிலும் இரண்டு கூருகவே இயங்குவர். இதனைக் கொண்டு, பார்ப்பனரில் ஒரு வகையினர் தங்கள் நிலையில் மாறி வருகின்றனர் என்றோ, ஒரு வகையினர்தாம் மாருத தன்மையுடையவர்களாக உள்ளனர் என்றோ, கருதி விட வேண்டா. அவர்களுடைய நிலையில் அவர்கள் என்றும் மாருத தன்மையுடையவர்களே! அவர்கள் தங்களுடைய பார்ப்பனியத் தன்மையில் என்றுமே நெகிழ்ந்து விடாதவர்கள்! அவ்வாறிருக்க, அவர்களில் சிலர் மண்டல் குழு அறிக்கையை ஏன் வரவேற்பது போல் காட்டிக் கொள்கிருர்கள் எனில், நடுவண் அரசு நடைமுறைக்குத் தாங்கள் ஒத்துப் போவது போற் காட்டி—அதனுல் தங்களுக் கேற்படும் தலையாய சாதி, மத நன்மைகளைத் தொடர்ந்து பெறுவதற்கே! மண்டல் குழு அறிக்கைச் செயற் படுத்தத்தால் நாட்டில் சாதி அமைப்பு ஒழிந்து போக வழியில்லை அன்றோ? இந்த நிலையைப் பார்ப்பனர்கள் என்றும் வரவேற்கத்தானே செய்வர்.

அடுத்து, தமிழர்களுக்கு ஒன்றை இவ்விடத்தில் நாம் கூறியே ஆகல் வேண்டும்.

மண்டல் குழு அறிக்கைச் செயற்படுத்தம் ஒரு தற்காலிகச் சலுகை முறையே! இதனுல் தமிழினம் தலைநிமிர்ந்து விடவோ என்றும் நிலையான உரிமைகளைப் பெற்று விடவோ வாய்ப்பில்லை. **தமிழ் நாடு தனி நாடாக அமையாத வரை, இது போலும் சலுகைகளுக்காக அவர்கள் வடநாட்டினரையும், பார்ப்பனீய வணிகக் கூட்டங்களையும் போற்றிக் கொள்வதுடன், அவர்களிடம் என்றென்றும் நாம் கையேந்தியே நிற்க வேண்டும் என்பதை என்றும் மறந்து விட வேண்டா.** மண்டல் குழு அறிக்கைச் செயற்படுத்தம் போல், நமக்குக் கிடைக்கின்ற கோடிச் சலுகைகளை விட' தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையால் கிடைக்கும் வெற்றி, பலகோடி உரிமை நலன்களை நமக்குத் தொடர்ந்து ஈட்டித் தரும், மீட்டுத் தரும் என்பது அழிக்க முடியாத உண்மையாகும்!

சலுகை போனுல் போகட்டும்—நம்
அலுவல் போனுல் போகட்டும்!
தலைமுறை ஒரு கோடி கண்ட—நம்
தமிழ் (இனம்) விடுதலை ஆகட்டும்!

—பாவேந்தர்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம். O

Scanned with CamScanner

செய்தித்தாள் அறிக்கை:

பாவேந்தர் நூற்றுண்டு விழா உயர்நெறிக் குழுவிலிருந்து பாவலரேறு பெருஞ்சித்திரனுர் விலகுகிறுர்!

பாவேந்தர் நூற்றுண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக, அரசு 45 அறிஞர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவை ஓராண்டுச் செயல் பாட்டிற்கென அமைத்திருந்தது. அக்குழுவில், **உலகத் தமிழின முன்னேற்றக் கழக** முதல்வரும், **தென்மொழி, தமிழ்நிலம்** இதழ்களின் ஆசிரியரும் ஆகிய **பாவலரேறு பெருஞ்சித்திரனுரும்** ஒருவர்.

அரசு அமைத்த அந்தக் குழுவிலிருந்து இப்பொழுது, **பாவலரேறு பெருஞ்சித்திரனுர்** விலகிக் கொள்கிறுர் என்று அவர் அண்மையில் செய்தித்தாள்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறுர்.

அவருடைய அறிக்கையில், அக் குழுவிலிருந்து தாம் விலகுவதற்குரிய காரணங்களாக அவர் பின்வரும் கருத்துகளை வெளிப்படுத்திக் கூறியிருப்பதாவது:

1) பாவேந்தர் நூற்றுண்டு விழாவையொட்டி அமைக்கப்பெற்ற உயர்நிலைக் குழு கடந்த 8-4-90 அன்று ஒரு முறை கூடியதுடன் சரி. அதற்குமேல் இன்று வரை அக்குழு கூட்டப் பெறவே இல்லை. எனவே, இதுவும் பொது மக்களை ஏமாற்ற, ஒரு கண்துடைப்புக்காக அரசு அமைக்கும் பல குழுக்களைப் போலவே, அமைக்கப் பெற்ற ஒரு குழுதான் என்பது தெளிவாகிறது.

2) இக்குழு முதன் முறை கூட்டப் பெற்று, இதன் ஒரு பகுதி உறுப்பினர்களால் கொடுக்கப் பெற்ற, ஏறத்தாழ நூற்றைம்பது கருத்துகளில், ஏதோ இரண்டு மூன்று கருத்துகளை மட்டுமே அரசு செயலுக்காக எடுத்துக் கொண்டது. அது செயலுக்கு எடுத்துக் கொண்ட பத்தொன்பது கருத்துகளும் பொதுவான விழா வேடிக்கைகளை உள்ளடக்கியவையே; உறுப்படியான செயல்பாடுகள் பெரும்பாலும் இல்லை.

இந்நிலையில் இக்குழுவின் தேவையோ, அதன் பணியோ மதிக்கப் பெறவில்லை என்றே முடிவு செய்ய வேண்டியுள்ளது. இது. இக்குழுவிலுள்ள அறிஞர்களை அரசு அவமதித்த செயலாகும்.

3) அடுத்து, இக்குழு அமைக்கப் பெற்ற பின், அரசு நடத்திய இரண்டு மூன்று பாவேந்தர் விழாக்களில் இக்குழுவின் அறிஞர்கள் அழைக்கப் பெறவில்லை. வெறும் விழா அழைப்பு மட்டுமே, பொதுவாக எல்லாருக்கும் விடுப்பதுபோல் அனுப்பப் பெற்றிருந்தது.

4) அத்துடன், அரசு வழங்கிய பாவேந்தர் விருதுக்கான தகுதியாளர்கள் இக்குழு உறுப்பினர்களால் பரிந்துரைக்கவோ, தேர்ந்தெடுக்கவோ பெறவில்லை. அரசின் தலைவராலும் அவரைச் சார்ந்த அதிகாரிகள் சிலராலுமே தங்கள் விருப்பமாக—தாறுமாறாக—தகுதியற்ற நிலையில், தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பரிசுகள் வழங்கப் பெற்றிருக்கின்றனர். இந்தச் செயல்களும் அறிஞர் குழுவை முழுவதுமாகப் புறக்கணித்த அல்லது அவமதித்த செயல்களாகும்.

5) நூற்றுண்டு விழாவைப் பொதுவான ஆண்டு விழாப் போலவே அதுவும் தங்களுக்குப் பெருமை சேர்த்துக் கொள்ளும் விழாவாகவே கொண்டாடுவதற்கு அரசு விரும்புகிறதேயொழிய, பாவேந்தருக்குப் பெருமை சேர்ப்பதற்காகவோ, அவருடைய கருத்துகளைப் பரப்ப வேண்டுமென்கிற நோக்கத்திடனே அரசு கொண்டாட விரும்பவில்லை என்று தெரிகிறது.

6) பாவேந்தரின் தனிச் சிறப்பான கொள்கை தமிழை வளர்ப்பதும், தமிழால் இனத்தை மேம்பாடுறச் செய்வதும், இனத்தால் நாட்டுரிமைகளை மீட்பதும் அவற்றை நிலைபெறச் செய்வதுமே ஆகும். இக்கொள்கைகளில் எந்த ஒன்றையுமே கடைப்பிடிக்காமல் வெறும் விழா வேடிக்கைகளை மட்டுமே நடத்துவதால் அவரின் நூற்றுண்டு விழாக் கொண்டாடுவதற்குப் பெருமையுமில்லை; சிறப்புமில்லை. இவ்வகையான அரசின் போலிச் செயல்களுக்கு நாம் துணை போக விரும்பவில்லை.

7) மேலும், பாவேந்தரின் கொள்கைகளில், கொடுமுடியாய் விளங்குவது தலையாயது அவரின் தமிழ்வழிக் கல்வி என்னும் கோட்பாடேயாகும். அவரின் நூற்றுண்டு விழா ஆண்டிலிருந்தாவது, தமிழ் வழிக் கல்வியை அரசு கடைப்பிடிக்க முயற்சி செய்யாததுடன், அதற்கு எதிராக, ஆங்கில வழிக் கல்விக்கே மேலும் மேலும் வழியமைத்துக் கொடுக்கும் தமிழக அரசின் போக்கு மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

இவ்வேழு வெளிப்படையான காரணங்களுக்காகவும், இங்குக் கூற விரும்பாத வேறு சில மறைமுகக் காரணங்களுக்காகவும், நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தன்மானப் பேராசிரியர்களும், தமிழ்மானக் கொள்கையாளர்களும் தாழாத இனமானப் போராளிகளும் ஆகிய தமிழ்மானத் திருவாளர்கள். சாலை இளந்திரையனுர், சாலினி இளந்திரையனுர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு ஏற்பவும், அரசு அமர்த்திய 'பாவேந்தர் நூற்றுண்டு விழா உயர்நிலைக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன் என்று அரசுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். **பாவலரேறு பெருஞ்சித்திரனுர்**

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளைகள் நகர்தோறும் ஊர்தோறும் நிறுவப்படல் வேண்டும். ஓய்வின்றிக் கொள்கைப் பரப்பல் செய்ய வேண்டும். உழவர், தொழிலாளர் முதலிய அனைத்துத் தமிழ் மக்களுக்கும், முற்கால, தற்கால நிலைகளை மனத்திற் பதியும்படி விளக்கிக் கூறி, தமிழகத் தன்னுரிமைப் போர்த்திட்டம் வகுத்துக் கொண்டு போராட்டத்திலும் ஈடுபட வேண்டும். அப்போதுதான் இயக்கம் வளர்ச்சியுறும். இயக்க ஆதரவாளர்களையும் கண்டு கொள்ள முடியும்.

ஆகவே, உ.த.மு.க. முதல்வரும் அதன் முகாமையாளர்களும் கூடி, விரைவில் ஒரு செயல் திட்டத்தை உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

(ஒப்) பாவலர், சின்னப்பனார்.
கொம்மக் கோவில் 5-7-1990.

3. அன்பு நிறைந்த அறிவனார்க்கு, வணக்கம். ஆண்டுகள் பல கடந்த பின்னர் இம்மடல் தங்களின் பார்வைக்கு வருகிறது.

தமிழரும் தமிழினமும் இன்று எந்நிலையில்... தமிழின் நிலை என்ன?

இந்தியாவில் பார்ப்பனியம் செய்த-செய்கின்ற செய்யவிருக்கின்ற ஆரியக் கூத்துகள் அத்தனைக்கும் ஒரு முடிவு...!

தந்தை பெரியாரின் திடவுறுதியையும் புரட்சிப் பாவேந்தரின் போர்க் குணத்தையும் நாம் பெற்றாக வேண்டும்.

தமிழ்நிலம், பொருளியல் கழகம் அறிக்கைகளை ஊன்றிப் படிக்கின்றேன்.

"இதுதான் தமிழ்நாடு — இவன்தான் தமிழன்" என்கிற தலைப்பில் பாவலரேறு அவர்கள் எழுதிய கட்டுரையைப் படித்ததும், என்கையிலிருந்த சாட்டையைச் சுழற்றினேன்.

நன்றி மறந்த 'இனவுணர்வு குறைந்த' தன்னாற்றல் இழந்த பேடித் தமிழர்கள் இந்நாள் எண்ணிக்கையில்—வாய்ப்பு வருமானப் பதவியில் ...இது தமிழ்த் தாய்க்கும் பெருமை அளிப்பது அன்று.

பாவலரேறின் கண்ணீர் — துயரம் —பைந்தமிழ்த் தாயின் பதைப்பு—எனது முன்னேற்றம் தாக்கப்பட்ட அவலம்போல்...தமிழ் முன்னேற்றம் உலகக் குடிமகனின் முன்னேற்றம்.

அறிவனார், விழிகள் பிதுங்கும் சூழல்...

அன்பு, (ஒப்) உலகக்குடிமகன் 9-7-90

கமுதக்குடி,
பறம்புக்குடி(வழி)
முகவை மாவட்டம்.

விரைவில் வெளிவரவிருக்கிறது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்!

தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும்,
போராளிகளின் முயற்சிகளும், சிங்கள,
இந்திய அரசியல் சூழ்ச்சிகளும்,
உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப் பொழுது எழுதிய அரிய கட்டுரை, பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 300 பக்கங்கள் கொண்டது!

30 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையும் முன்னதாக அனுப்பிப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு நூல் வெளி வந்தவுடன் இலவயப் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறும்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு • 57

மக்களைத் திரட்டுவது ஒரு வகையில் எளிதே! ஆனால், அவர்களை ஒத்த உணர்வுடன் ஒரு செயலில் ஈடுபட வைப்பதே கடினம்! மிகவும் கடினம்!

மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 140

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை 5.